**அக்டோபர்: 04**

## பஸ்கா பண்டிகை – இராபோஜனம்

**வாசிக்க: மத்தேயு 26:16-30**

இயேசு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: இரண்டுநாளைக்குப்பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள், அப்பொழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார். பின்பு அவர்களை பார்த்து நீங்கள் நகரத்திலே இன்னானிடத்திற்குப் போய்: என் வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன் என்று போதகர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார். இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள். சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார். அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள், பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார்.




பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்கள் அநேக பண்டிகைகளை அனுசரித்தனர். அவைகளில் பஸ்கா பண்டிகை மிக முக்கியமானது. அதன் உண்மையான கருத்தை தம் சீஷருக்கு சொல்லவே நம் ஆண்டவர் இந்த முறையை சொன்னார். இதை புரிந்து கொள்ள பஸ்கா என்றால் என்ன என நாம் அறியவேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமையாக இருந்த போது, கர்த்தர் மோசேயை அனுப்பி பார்வோனுக்கு கட்டளையிட்டார். ஆனால் அவன் விடுதலை செய்ய மறுத்ததால், ஒன்பது அதிசயங்களை செய்தார். அப்போதும் அவன் மனதை கடினபடுத்தியதால் கடைசியாக தேவகோபம் எகிப்த்திலுள்ள எல்லா தலைச்சன் பிள்ளைகளையும் சங்கரிக்க எழுந்தது. அந்த சமயத்தில் யூதர்களும் அங்கே வசித்ததால், அவர்களை தேவகோபத்திலிருந்து தப்பிக்க கர்த்தர் காண்பித்த வழிதான் பஸ்கா பண்டிகை. ஒரு பழுதற்ற ஆட்டுகுட்டியை பலி தந்து, மாமிசத்தை சாப்பிட்டு இரத்தத்தை வீட்டுவாசலிலே பூசவேண்டும். அந்த இரத்தத்தை வீட்டின் நிலைகாலின் சங்காரதூதன் பார்த்து விட்டு அடுத்த வீட்டிற்கு போய் விடுவான். இப்போது இயேசுவே உலகத்தின் சகல பாவங்களையும் சிலுவையில் சுமந்தார். அவர் நமக்காக செய்த தியாகத்தை நினைக்கும் போதெல்லாம், நமக்குள்ளே புது பெலன், புது கிருபை, புதியநேசம் நிரம்பி வழியும். ஒரு முக்கியமான விஷயம்; இயேசப்பாவை பின்பற்ற தங்கள் வாழ்வை அர்பணித்தவர்கள் மட்டுமே இதில் பங்கு கொள்ளவேண்டும்.

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. 1 பேதுரு 1:19

## ஜெபம்

மகிமையான பரலோக தந்தையே, சிலுவையில் நீர்மரித்ததால் இதோ நான் உயிரோடு ஜெபிக்கிறோம். இதன்மூலம் எங்க விசுவாசம் வளர கிருபை தாங்கப்பா. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

